**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No.9/2024 PW.3**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சொக்கலிங்கம் | த–பெ | அருணாச்சலம் |
| ஊர்: | : | கோட்டையூர் | சமயம்: | |
| வயது: | : | 48/2024 | வட்டம்: | |
| தொழில்: | : | ஆக்டிங் டிரைவர் | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.11.2024**

---

25.11.2024

<u>முதல் விசாரணை:</u>

1) நான் இவ்வழக்கின் புகார்தாரர் தரப்பு 3 வது சாட்சி ஆவேன். நான் எனது தரப்பு சாட்சியத்தை நிரூபணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் இருப்பது எனது கையொப்பம் தான். ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**என்னுடைய ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) ம.சா.ஆ. 7 ஆகும்.**

**<u>குறுக்குவிசாரணை</u>**

1) நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணையில் என்ன எழுதியிருந்து என்று படித்து பார்த்து கையெழுத்து செய்தேனா என்றால் எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்தது. எனக்கு தெரிந்த விபரத்தை நான் சொல்லிதான் நிரூபண வாக்குமூலம் தயாரிக்கப்பட்டது. இந்த வழக்கு குறித்து எனக்கு என்ன தெரியும் என்றால் குணசுந்தரியின் கணவர் எனது நண்பர் ஆவார். அன்றைய தினம் அவர் வீட்டிற்கு நான் சென்றிருந்தபோது குணசுந்திரி வினோதா என்பவருக்கு ரூ. 4 லட்சம் கடனாகக் கொடுத்தார். நான் 3 வது மணிதர் என்பதால் என்னை ம.சா.ஆ.1 ஆவணத்தை எழுதிக்கொடுக்கும்படி கேட்டுக்கொண்டனர். அதன் படி ம.சா.ஆ.1 ஆவணத்தை எழுதிக்கொடுத்தேன். நான் எழுதியதாக சொல்லும் ஆவணம் எந்த தேதியில் எத்தனை

மணிக்கு எழுதப்பட்டது என்றால் காலை 11 மணியளவில் கடந்த 31.03.2022 ல் எழுதப்பட்டது. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் ஆக்டிங் டிரைவராக வேலை செய்து வருகிறேன்.

2) நான் புகார்தாரர் வீட்டிற்கு சென்ற போது யார் யார் இருந்தனர் என்றால் குணசுந்தரி, வினோதா மற்றும் நான் இருந்தோம். நான் புகார்தாரருக்கு உறவினாரா என்றால் நானும் புகார்தாரரின் கணவரும் நானும் டிரைவராக வேலை செய்கிறோம் அதனால் கடந்த 7, 8 வருடங்களாக எங்களுக்குள் பழக்கம் புகார்தாரர் கேட்டுக்கொண்டதற்காக நான் சாட்சியாக கையொப்பம் செய்தேனா என்றால் ஆமாம். ம.சா.ஆ.1 ஆவணத்தில் யார் யார் கையொப்பம் செய்தார்கள் என்றால் எதிரியும் ஆவணத்தைஎழுதிய சாட்சியாக நானும், கையொப்பம் செய்தோம். பொதுவாக எந்த ஆவணம் எழுதிக்கொண்டால் இருதரப்பினரும் கையொப்பம் செய்யவேண்டும் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. கடனுறுதிசீட்டை எப்படி எழுதவேண்டும் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எந்த விபரமும் தெரியாதுபோது எதற்காக இந்த ஆவணத்தை எழுதிக்கொடுத்தேன் என்றால் நட்பு ரீதியான நான் சென்றிருந்தபோது எழுதித்தர கேட்டுக்கொண்டதால் எனக்கு தெரிந்த வரையில் ஆவணத்தை எழுதிக்கொடுத்தேன்.

3) மேற்படி ஆவணத்தில் காசோலை தொடர்பாக எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்படி ஆவணத்தை புகார்தாரர் வாங்கிவைத்திருந்தாரா என்றால் ஆமாம் வாங்கி வைத்திருந்தார். அன்றைய தினம் புகார்தாரரின் கணவர் அங்கு இருந்தாரா என்றால் இல்லை. எதற்காக சென்றேன் என்றால் புகார்தாரரின் கணவரை பார்ப்பதற்காக சென்றேன் அவர்அங்கு இல்லை. நான் சென்றதால் எழுதிக்கொடுக்கும்படி கேட்டுக்கொண்டார் நான் எழுதிக்கொடுத்தேன். நான் சொன்ன தேதியில் நான் புகார்தாரர் வீட்டிற்கு செல்லவில்லை என்றாலும், நான் அந்த ஆவணத்தை எழுதவில்லை என்றாலும் சரியல்ல. நான் சொல்வது போல் மேற்படி ஆவணம் எழுதப்பட்டிருந்தால் புகார்தாரும் அதில் கையொப்பம் செய்திருப்பார் என்றால் சரியல்ல. புகார்தாரர் கேட்டுக்கொண்டதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

| |
|---|
| சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால சரி என்று |

ஒப்புக்கொள்ளப்பட்டது.

( ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா, B.Sc., B.L., (Hon's))

விரைவுநீதிபதி, காரைக்குடி.